


**01.01. 2025**

**தலைப்புச் செய்திகள்**

**1.** பாதுகாப்பு துறைக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் நடப்பாண்டில் ஏராளமான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**2.** உயர் கல்வி மாணாக்கர் ஆராய்ச்சி கட்டுரைகளை இலகுவாக பெறுவதற்கான ஒரே நாடு ஒரே சந்தா முறை திட்டத்தை மத்திய அரசு இன்று அறிமுகம் செய்தது.

**3.** ஆங்கில புத்தாண்டு உலகம் முழுவதும் உற்சாகத்துடனும், கோலாகலத்துடனும் கொண்டாடப்பட்டு வருகிறது.

**4.** இலங்கை நீதிமன்றம் விடுவித்த தமிழகத்தை சேர்ந்த 20 மீனவர்கள் இன்று சென்னை வந்து சேர்ந்தனர்.

**5.** உலக Blitz சதுரங்க சேம்பியன் பட்ட மகளிர் பிரிவில் இந்தியாவின் வைஷாலி வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார்.

**இனி விரிவான செய்திகள்**

***********

**ராஜ்நாத்சிங்**

பாதுகாப்பு பிரிவிற்கு உத்வேகம் அளிக்கும் வகையில் நடப்பாண்டு இத்துறையில் ஏராளமான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங், பாதுகாப்பு அமைச்சக செயலர்களுடன் மேற்கொண்ட முக்கிய ஆலோசனை கூட்டத்தில், ராணுவ திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து ஆய்வின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

சீர்திருத்தங்களால் அதிநவீன தொழில்நுட்பத்துடன், முப்படைகள் மேம்படுத்தப்படுவதோடு, நாட்டின் எதிர்கால சாதனை திட்டங்களுக்கும் அடித்தளமாக அமையும் என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதால் முப்படைகள் ஒருங்கிணைந்து செயல்படுவதோடு எவ்வித சவாலையும் எதிர்கொள்ளும் திறனோடு அதிநவீன தொழில்நுட்பங்களுக்கும் அது வகை செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ராணுவ தளவாட உற்பத்தியை அதிகரிப்பது, கட்டமைப்பின் தரத்தை மேம்படுத்துவது, கொள்முதல் நடவடிக்கைகளை அதிகரிப்பது, செயற்கை நுண்ணறிவு, ட்ரோன், சைபர் போர் திறன்கள் பயன்பாட்டிற்கு உயர் முன்னுரிமை அளிக்கவும் வகை செய்யப்படுகிறது.

ராணுவ தளவாடங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நாடாக இந்தியா உருவாவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு, ஆராய்ச்சி மேம்பாட்டிற்கும் அதி கவனம் செலுத்தப்பட உள்ளது.

ஓய்வு பெற்ற பழமையான ராணுவ வீரர்களின் நலன்களுக்கான திட்டங்களை செயல்படுத்தவும் ராணுவ சீர்திருத்தங்கள் வழிகோலுகிறது.

***********

**ஒரே நாடு ஒரே சந்தா**

உயர்கல்வி மாணாக்கரின் ஆராய்ச்சி கட்டுரைகளுக்கு வகை செய்யும் ஒரே நாடு ஒரே சந்தா முறை திட்டத்தை மத்திய அரசு இன்று அறிமுகம் செய்தது.

இதன்மூலம் ஆராய்ச்சி கட்டுரைகள், பத்திரிக்கைகள், கல்வி திட்டங்கள் போன்றவற்றை ஒரே சந்தா முறையின் மூலம் பயனாளிகள் பெற முடியும்.

இத்திட்டத்தால் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் பயனடைவதோடு, கல்வி நிறுவனங்களும் பயன்பெறும்.

உலகளாவிய நிபுணர்கள் மற்றும் வல்லுநர்களின் சிறந்த ஆராய்ச்சி கட்டுரைகளை உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் ஒரு கோடியே 80 லட்சம் மாணாக்கர் பார்வையிட இயலும்.

முதற்கட்டமாக அறிவியல் தொழில்நுட்பம், பொறியியல், மருத்துவம், கணிதம், மேலாண்மை, சமூக அறிவியல், மனிதவளம் தொடர்பான 13 ஆயிரத்து 400க்கும் மேற்பட்ட சர்வதேச கட்டுரைகளை வாசிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த திட்டம் தனியார், உயர்கல்வி நிறுவனங்களுக்கும், படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு பின்னர் அனைத்து தரப்பு மக்களும் படித்து பயன்பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று முதன்மை அறிவியல் ஆலோசகர் பேராசிரியர் அஜய்குமார் சூத் தெரிவித்துள்ளார்.

ON, OS எனப்படும் இந்த திட்டத்திற்காக 3 ஆண்டுகளுக்கு ஆறாயிரம் கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு ஒதுக்கியுள்ள நிலையில் சிறந்த கட்டுரைகளை வெளியிட ஆண்டொன்றுக்கு 150 கோடி ரூபாயும் மத்திய அரசு வழங்குகிறது.

***********

**திறன்மேம்பாடு**

நாட்டின் இளையோர் ஆளுமை பெறும் வகையில் கடந்த 10 ஆண்டுகளில் படைப்பாற்றல் திறன், திறன்மேம்பாடு, தொழில்முனைவு, தொழில்நுட்ப வளர்ச்சியை இலக்காக கொண்டு பல்வேறு கொள்கைகளையும், திட்டங்களையும் மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

நம் நாட்டு இளையோர் பயன்பெறும் வகையில் ஏராளமான தொடர் வாய்ப்புகளை நரேந்திரமோடி அரசு கடந்த 10 ஆண்டுகளாக வழங்கி வருகிறது.

இதன்ஒருபகுதியாக மோடி அரசின் 3 ஆவது ஆட்சி காலத்தின் முதல் 100 நாட்களில் 15 லட்சத்திற்கும் மேற்பட்ட இளையோருக்கு அரசு வேலைகளுக்கான நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இளையோருக்கு வாய்ப்பு வழங்கும் வகையில் ஒரு கோடியே 42 லட்சம் இளையோருக்கு பிரதமரின் திறன்மேம்பாட்டு பயிற்சிகள் முனைப்புடன் வழங்கப்பட்டுள்ளது.

பொது தேர்வுகளில் முறைகேடுகளை தடுக்கும் வகையில் பொது தேர்வு சட்டம் 2024-ஐ மத்திய அரசு அறிமுகம் செய்தது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் எதிர்காலத்தில் அறிவியல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை கருதி இது தொடர்பான செயல்பாடுகளில் இளையோரை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

கல்வியின் பாரம்பரிய கலாச்சாரத்தை மீட்டெடுக்கும் வகையில் பழமையான நாளந்தா பல்கலைகழகத்திற்கு புத்துயிர் ஊட்டப்பட்டு கல்வி திறன்மேம்பாட்டிற்கு மத்திய அரசு முன்னுரிமை வழங்கி வருகிறது.

***********

**புத்தாண்டு**

2025 ஆங்கில புத்தாண்டு உலகம் முழுவதும் உற்சாகத்துடனும், கோலாகலத்துடனும் இன்று கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முழுவதும் காவல்துறையினரின் பலத்த பாதுகாப்பிற்கு இடையே புத்தாண்டு கொண்டாட்டங்கள் களைகட்டின.

நாகை வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலயம் உட்பட நாடுமுழுவதும் கிறிஸ்தவ தேவாலயங்களில் நடைபெற்ற நள்ளிரவு சிறப்பு பிரார்த்தனைகளில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

திருச்சி மலைக்கோட்டை தாயுமானவ சுவாமி திருக்கோவிலில் மாணிக்கவிநாயகருக்கு தங்க கவசம் அணிவித்து சிறப்பு பூஜைகள் இடம்பெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர்,

பழனி அருள்மிகு தண்டாயுதபானி சுவாமி திருக்கோவில் உட்பட மாநிலத்தின் அனைத்து திருக்கோவில்களிலும் அதிகாலையிலேயே நடை திறக்கப்பட்டு, சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

புத்தாண்டை ஒட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு,

குடியரசு துணை தலைவர் திரு.ஜக்தீப் தன்கர்,

பிரதமர் திரு.நரேந்திரமோடி

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் மக்களுக்கு உளம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

***********

**மீனவர்கள்**

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு அந்நாட்டு நீதிமன்றம் விடுவித்த தமிழகத்தை சேர்ந்த 20 மீனவர்களும் இன்று சென்னை வந்து சேர்ந்தனர்.

மாநில மீன்வளத்துறை அதிகாரிகள் விமான நிலையத்தில் அவர்களை வரவேற்று சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைத்தனர்.

ஓராண்டுக்கு முன்பு கைது செய்யப்பட்ட இம்மீனவர்கள் புதுக்கோட்டை தூத்துக்குடி மாவட்டங்களை சேர்ந்தவர்கள்.

***********

**வருமான வரி**

2024-25 நிதியாண்டிற்கான தாமதமான மற்றும் திருத்தப்பட்ட வருமானவரி கணக்குகளை தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் வரும் 15-ம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

வரிசெலுத்துவோர் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

***********

**முதலமைச்சர்**

சென்னை செம்மொழி பூங்காவில் மலர் கண்காட்சியை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் நாளை தொடங்கிவைக்கிறார்.

சுமார் 30 லட்சம் மலர்களால் வடிவமைக்கப்பட்ட யானை, பட்டாம்பூச்சி, தொடர் வண்டி உள்ளிட்டவை இதில் இடம்பெறுகிறது.

இதற்கென உதகை, கொடைக்கானல், ஒசூர் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து மலர் செடிகள் கொண்டுவரப்பட்டுள்ளதாக தோட்டக்கலைத்துறை தெரிவித்துள்ளது.

***********

**ராஜகண்ணப்பன்**

தமிழகத்தில் கதர்கிராம தொழில்வாரியத்தின் புதிய ரக பட்டு மற்றும் இதர பொருட்களின் விற்பனையை மாநில கதர் கிராம தொழில் துறை அமைச்சர் திரு.ராஜகண்ணப்பன் இன்று சென்னையில் தொடங்கிவைத்தார்.

***********

**இருவரி**

**பெரம்பலூர் மாவட்ட குழந்தைகள்** பாதுகாப்பு அலகில் உள்ள காவலர் பணியிடத்திற்கு வரும் 20ஆம் தேதிக்குள் தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

**சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு** பணியாளர் தேர்வாணைய தேர்வுகளுக்கான இலவச பயிற்சி பெற விரும்பும் ஆதி திராவிடர் பழங்குடியினர் மாணாக்கர் இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் கூறியுள்ளார்.

**தமிழ்நாட்டில் வரும் கல்வியாண்டில் புதிய** தொழிற்பள்ளிகள் தொடங்குதல், அங்கீகாரத்தை புதுப்பித்தல், புதிய தொழிற்பிரிவுகள் மற்றும் கூடுதல் அலகுகள் துவங்குதல் ஆகியவற்றிற்கு நாளைமுதல் அடுத்த மாதம் 28-ம் தேதிக்குள் இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

**ஃபென்ஜல் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட** கடலூர் விழுப்புரம் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஒத்திவைக்கப்பட்ட அரையாண்டு தேர்வுகள் நாளை தொடங்குகின்றன.

1 முதல் 8 ஆம் வகுப்பு மாணாக்கருக்கு வரும் 10ஆம் தேதிவரை இத்தேர்வுகள் நடைபெற உள்ளன.

**நாமக்கல், கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வரும்** 5-ஆம் தேதி நடைபெற உள்ள நெடுந்தூர ஓட்டப்போட்டிக்கு வரும் சனிக்கிழமைக்குள் முன்பதிவு செய்துகொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

***********

**அகழாய்வு**

விருதுநகர் மாவட்டம் விஜயகரிசல் குளத்தில் நடைபெறும் 3ஆம் கட்ட அகழாய்வில் **அல்லிமொட்டு வடிவ ஆட்டக்காய்கள்** உள்ளிட்ட பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

***********

**NtY}H:**

nghq;fy; gz;bifia xl;b NtY}H khtl;lk; Nf.tp Fg;gk; gFjpapy; nty;yk; jahhpf;Fk; gzp KOtPr;rpy; eilngWtjhf vkJ nra;jpahsh; njhptpf;fpwhh;.

**....tha;];...**

***********

**குற்றாலம்**

குற்றால அருவிகளில் நீர்வரத்து சீரானதை அடுத்து பிரதான அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க மாவட்ட நிர்வாகம் இன்று அனுமதி அளித்துள்ளது.

இதனால் ஐந்தருவி, புலியருவி, சிற்றருவிகளில் ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளனர்.

***********

**மேட்டூர்**

மேட்டூர் அணை அதன் முழு கொள்ளளவான 120 அடியை எட்டிய நிலையில் அணைக்கு வினாடிக்கு ஆயிரத்து 791 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.

அணையிலிருந்து பாசனத்திற்காக ஆயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

***********

**வானிலை**

தென்மேற்கு வங்க கடல் பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கன்னியாகுமரி திருநெல்வேலி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கொடைக்கானல் பகுதிகளில் இரவு நேரங்களில் ஓரிரு இடங்களில் உறைபனி நிலவக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

தென்தமிழகம் மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அடுத்த 4 நாட்களுக்கு இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

***********

**செஸ்**

அமெரிக்காவில் நடைபெறும் உலக Blitz சதுரங்க சேம்பியன் பட்ட போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியாவின் வைஷாலி வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார்.

ஆடவர் பிரிவில் முன்னனி வீரர் நார்வேயின் மேக்னஸ் கால்ஸன், ரஷ்யாவின் Ian nepo mniachtchi-உடன் சேம்பியன் பட்டத்தை பகிர்ந்துகொண்டார்.

***********

**ஹாக்கி**

ஒடிசாவில் நடைபெறும் ஹாக்கி இந்தியா லீக் ஆட்டத்தில் **சராச்சி ராஹ் பெங்காள் டைகர்ஸ்** - **கொனாசிகா** அணியை இன்றிரவு எதிர்கொள்கிறது.

***********